1986 ஏப்ரல் 25]

விருப்பத்திற்கு மாறாக மதுரை, திருச்சி, வேலூர் போன்ற இடங்களுக்கு மாற்றப்படுவதன் காரணமாக பல தாய்மார்கள் தங்கள் கணவரை பிரிந்தும், குழந்தைகளைப் பிரிந்தும் துன்பத்தில் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதைப்போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, குடிநீர் வழங்கும் பணிகள் சிறப்பான வகையிலே செய்யப்பட வேண்டுமானால், ஆட்சியின் அதிகாரங்கள், நிர்வாக அமைப்புகள் பரவலாக்கப்படுவது தேவை என்ற வகையில்தான், முடிவு செய்து அந்த மாற்றம் செய்திருக்கிறோம். இதிலே எவ்வளவு செலவு ஆகிறது என்பதே பிரச்னை இல்லை. ஆனால் அதிலே பணியாற்றக்கூடிய அலுவலர்களுடைய குறைகளை நாம் மனிதாபிமானத்தோடு ஏற்றுத்தான், கடந்த ஆண்டே இந்த திட்டம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களுடைய விருப்பத்தை ஏற்றுத்தான், இந்த நேரத்திலே அதை செயல்படுத்துகிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரைத் தலைமையகமாகச் செய்ததால் சேலம், தர்மபுரி மாவட்டத்து மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அவ்வாறு இருப்பது அம்மக்களின் விருப்பத்திற்கு எதிராக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது, ஆகவே, அந்த அடிப்படையிலும், வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்கள் சென்னைக்கு அருகே இருப்பதால், போக்குரவத்து வசதி அதிகமாக இருக்கிற காரணத்தால், வேலூரில் உள்ள தலைமையகத்தை சென்னைக்கு மாற்ற அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதனால் பாதிப்பு எதுவும் இல்லை. மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினா எண். 6 மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க முன்னமேயே எடுத்துக்கொள்ளப் பெறுகிறது.

புதுக்கோட்டை நகருக்குக் குடிநீர் வழங்குதல்.

(குறுகியகால வினா. எண். 6*வினா– எண். 9113)—

திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகருக்கு, காவேரி உபரிநீரை குடிநீராக்க, தமிழக அரசு சுமார் 11.00 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது உண்மையா ?

[1986 ஏப்ரல் 25

(ஆ) இந்த திட்டத்திற்கு புதுக்கோட்டை நகராட்சி ஆய்வுத்தொகை எவ்வளவு செலுத்தியுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) இல்லை. புதுக்கோட்டை நகருக்கும் மற்றும் சில வழியோர நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் காவிரி ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்குவதற்கான, கூட்டுக் குடிநீர்த்திட்டம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அத்திட்டத்திற்கான ஆய்வுத்தொகை எதுவும் நகராட்சியால் செலுத்தப்படவில்லை.

திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி குடிநீர் திட்டத்தின் கீழ் புதுக்கோட்டையைத் தவிர வேறு எந்த எந்த இடங்களுக்கு, அந்த திட்டத்தின் கீழ் பயன் கிடைக்கும். அந்த திட்டம் எப்போது முதல் செயல்படத் துவங்கும். திருச்சியில் உள்ள காவிரி நதியில் எந்த இடத்திலிருந்து அந்த திட்டம் ஆரம்பிக்கப்படும் ? குழாய் மூலமாகவா, அல்லது கால்வாய் மூலமாகவா, எந்த வகையில் இந்த திட்டம் செயல்பட இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

[முற்பகல் 9.40]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தால் புதுக்கோட்டை நகரம் மற்றும் பொன்னமராவதி, அன்னவாசல், கீரனூர் ஆகிய மூன்று பேரூராட்சிகளும் திருச்சி-புதுக்கோட்டை சாலையில் அமைந்துள்ள தொழில் பேட்டைகளும், அன்னவாசல், விராலிமலையில் அமைந்துள்ள தொழில் கூடங்களும் பயன்பெறும். முதலில் இந்தத் திட்டத்திற்கு 1,500 லட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டது. தற்போது ரூ. 16.46 கோடி செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான உத்தேச மதிப்பீடு ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. அது பற்றி விரிவான ஆய்வு இன்னும் செய்யப்படவில்லை.

திரு. ஜே. முகம்மது கனி : தலைவர் அவர்களே, வருகிற 25—5—1986 அன்று தமிழகத்தினுடைய முதலமைச்சர் புதுக்கோட்டைக்கு வருவதாக தெரிவித்து இருக்கிறார்கள். அன்றைய தினம் இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி, திட்டத்தின் துவக்க விழாவை வைத்து, விரைவில் திட்டம் செயல்படும் வகையில் செய்யும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா ? எப்போது இந்தத் திட்டம் செயல்பட துவங்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1986 ஏப்ரல் 25]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, உறுப்பினர் கனி அவர்களுக்கு நான் தெரிவிக்கிற பதில், திட்டம் இன்னும் கனியாகவில்லை. காயாகத்தான் இருக்கிறது. கனியும் வரையும் அவர் காத்திருக்க வேண்டும்.

திரு. த. புஷ்பராசு : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, குடிதண்ணீருக்காக புதுக்கோட்டைக்கு காவிரி தண்ணீர் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். புதுக்கோட்டை மாவட்டம் மிகுந்த வறட்சியான மாவட்டமாகும். அந்த மாவட்டத்திற்கு குடிதண்ணீர் கொண்டு வருகிறபோது பாசனத்திற்கும் தண்ணீர் கொண்டு வருகிற அளவிற்கு திட்டத்தை தயார் செய்தால் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு விமோசனம் பிறக்கும். ஆகவே அரசு புதுக்கோட்டை மாவட்டத்தில் பாசனத்திற்கும் காவிரித் தண்ணீர் பயன்படுத்துகிற அளவிற்கு திட்டத்தை தயாரிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, புதியசிக்கலை கிளப்பி வரக்கூடிய குடிதண்ணீருக்கும் பாதகத்தை உருவாக்கிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கத்திவாக்கத்தில் இரயில்வே மேம்பாலம்.

561—(*வினா எண். 4064)—திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எண்ணூர் பகுதியில் உள்ள கத்திவாக்கம் ரெயில் நிலையத்தில் மேம்பாலம் கட்ட சிபாரிசு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : தலைநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கத்திவாக்கம் ரெயில் நிலையத்தில் மேம்பாலம் கட்டுகிற குறிப்பு இல்லையென்று சொன்னார்கள். அது மிகப்பெரிய தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். 1982 ஆம் ஆண்டில் கூட நம்முடைய அரசாங்கப் பேருந்து ஒன்றிற்கு பாதிப்பு ஏற்பட்டு ஆறு தொழிலாளர் நண்பர்கள் இறந்துவிட்டார்கள். ஆகவே அவசியமாக இருக்கிற அந்தப் பகுதிக்கு நம்முடைய நடுவண் அரசுக்கு நம்முடைய மாநில அரசு பாலம் கட்ட வேண்டுமென்று பரிந்துரை வழங்குவீர்களா? அந்தப் பகுதியில் பாலம் கட்டுகிற வாய்ப்பை உருவாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.